உங்களுக்கு உதவி செய்ய தேவன் என்னை இங்கு அனுப்பியிருக்கிறார். அது உங்களை வெட்டினாலும், நோகப் பண்ணினாலும், என்ன செய்தாலும், அதை நான் கூறியே ஆக வேண்டும்



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்



## செய்தி: 64-08-30 M கேள்விகளும் பதில்களும் COD #22

**166.** நாம் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். நான் என் மகனுடன் உண்மையுள்ளவனாயிராமல்

போனால், உங்களுடன் உண்மையுள்ளவனாயிருக்க முடியாது. நான் உங்களிடம் கூறுவது என் உண்மையுள்ள கருத்து என்பதை நீங்கள் விசுவாசிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அதிலிருந்து எதையும் உண்டாக்கி விடாதீர்கள், நான் சொன்னவிதமாகவே அதை சொல்லுங்கள் (பாருங்கள்?), ஏனெனில் நான் உங்களுக்கு உண்மையையே உரைக்கிறேன்.

167. இப்பொழுது, நான் உங்களிடம் இவ்விதமாக அடிக்கடி பேசுவதில்லை, ஏனெனில் நீங்கள்

என் பிள்ளைகள், அவ்விதமே உங்களை நான் அழைக்கிறேன். நான் சுவிசேஷத்தின் மூலம் உங்களை கிறிஸ்துவுக்கு பெற்றெடுத்தேன். நாம் இங்கு ஒன்றாய் இருக்கும் போது, நம்முடைய சொந்த குழு இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கும் போது, உங்களை சிறிது கடிந்து கொள்கிறேன். ஆனால் இதை உங்களிடம் கூற விரும்புகிறேன். நீங்கள் என்னிடம் வந்து ஏதாவதொன்றை கேட்பீர்களானால், எனக்குத் தெரிந்ததை உங்களுக்குச் சிறந்த முறையில் எடுத்துரைப்பேன். அது

வார்த்தையில் இருக்குமானால், அது என்னைக் குற்றப்படுத்தினாலும் எனக்குக் கவலையில்லை, என்னிடமிருந்தும் அநேக காரியங்கள் அகற்றப்பட வேண்டியதாயுள்ளது. நிச்சயமாக!

168. நீங்கள் என்னிடம் ஏதாவதொன்றைக் கேட்டால், நான் உங்களுக்கு பதில் கூறுவேன். உங்களுக்கு நான் ஏதாவதொன்றைக் கூறினால், உங்களுக்கு நான் சத்தியத்தையே கூறுவேன். அவ்விதமாகவே வாழ நான் எப்பொழுதும் முயன்று வந்திருக்கிறேன். அவ்விதமாவே

நான் வாழ்ந்து அவ்விதமாகவே நான் மரிக்க விரும்புகிறேன் – எவரிடத்திலும் உண்மையுள்ளவனாயிருக்க.

169. அண்மையில் ஒரு இளம் பெண் என்னிடம் வந்தாள்; அந்த ஸ்திரீ இப்பொழுது இங்கில்லை. டாம் சிம்ப்ஸன், உங்களில் பலருக்கு அவரைத் தெரியும். டாம் நல்லவர்; அவருடைய குடும்பத்தினர் இங்கில்லை (அவர்கள் எல்லோரும் திரும்பி போய் விட்டனர் என்று நினைக்கிறேன், ஃபிரட் இன்னும் இங்கு இருந்தாலொழிய. நான் ....

பிரட் சாத்மன், அவர் இங்கிருக்கிறாரா இல்லையாவென்று எனக்குத் தெரியவில்லை. அவா இருக்கிறார் என்று தான் நினைக்கிறேன்) டாம் சிம்ப்ஸன், அவர் ஃபிரட்டுடன் கூட கனடாவிலிருந்து வந்தவர். அவர்கள்... (உங்களுக்கு நமது தர்மகர்த்தா ஃபிரட்டைத் தெரியும்).

170. உங்களில் பலருக்கு சகோ.டாம்மைத் தெரியும். டாம்“ அருமையான ஒரு மனிதன்; அவர் சிறந்த உடை உடுப்பவர்; திருமதி சிம்பஸனும் கூட. அவள் மட்டும் நான் சொல்வதற்கு

செவிகொடுத்தால், அவள் மீண்டும் நடப்பாள். அவள் ஊனமுற்றவளாய் சக்கர நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். அவள் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டதை அவள் மட்டும் செய்வாளானால், அவள் நடப்பாள். அது உண்மையா என்பதை கவனித்து அறிந்து கொள்ளுங்கள். பாருங்கள்? இப்பொழுது அவள் அதை எதிர்பார்த்தால், அவள் என்ன செய்ய வேண்டுமென்று கூறப்பட்டதோ, அவள் அதை செய்ய வேண்டும்.

171. அவளுடைய பெண்களில் ஒருத்தி, அழகான சிறு பெண்கள்... நான்.... அவர்கள் சிறுமிகளாயிருந்த போது, அவர்களை என் தொடையின் மேல் வைத்து அவர்களுடன் விளையாடுவது வழக்கம். இப்பொழுது அவர்கள் பெரியவர்களாகிவிட்டனர்; அவர்கள் ஏறக்குறைய ஸ்திரீகள், பத்து பன்னிரண்டு வயதுடையவர்கள். எனவே அவர்களில் ஒருத்தி என்னிடம் வந்து, “சகோ. பிரான்ஹாமே, நான் ஒரு சொப்பனம் கண்டேன்“ என்றாள். அவள் என்னிடம் அந்த சொப்பனத்தை உரைத்தாள்.

“அதன் அர்த்தம் என்ன?“ என்று அவள் கேட்டாள்.

நான், “தேனே, எனக்குத் தெரியாது. நான் ஜெபிக்கிறேன், கர்த்தர் எனக்கு அதை அருளுவாரானால், நான் உன்னிடம் கூறுகிறேன்“ என்றேன்.

172. அவள், “சரி“ என்றாள். சில நாட்களுக்குப் பிறகு அவள் என்னிடம் வந்து, “அந்த சொப்பனம் கிடைத்து விட்டதா?“ என்று கேட்டாள்.

நான், “இல்லை, தேனே, எனக்குக் கிடைக்கவில்லை; அவர்

எனக்கு வெளிப்படுத்தி தரவில்லை என்றேன்.

173. ஓரிரண்டு வாரம் கழித்து அவள் திரும்பவும் வந்து, “சகோ.பிரான்ஹாமே, அந்த சொப்பனத்தைக் குறித்தென்ன?“ என்று வினவினாள்.

நான், “எனக்குத் தெரியாது’ என்று சொன்னேன். அவள் ஏமாற்றமடைந்தது போல் காணப்பட்டாள். நான் ...

174. இதை ஞாபகம் கொள்ளுங்கள், நீங்கள் என்னிடம் ஏதாவதொன்றைக் கேட்டு, அதை நான் தேவனிடத்திலிருந்து

பெறவில்லை என்றால், எனக்கும் கூட ஏமாற்றம் உண்டாகிறது. ஆனால் நான் மாய்மாலக்காரனாக அல்லது பொய்யனாக இருக்க மாட்டேன், உங்களிடம் நான் உண்மையே எடுத்துரைப்பேன். அவர் என்னிடம் கூறுவாரானால், அதை நான் உங்களுக்கு எடுத்துரைப்பேன்; அவர் கூறாமல் போனால், நானும் கூறமாட்டேன். அவ்வளவுதான் என்னால் செய்ய முடியும். அவ்விதமாக நீங்கள் என்னை நம்ப வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

175. அந்த சொப்பனத்தின் அர்த்தம் என்னவென்று என் மனதில் அறிந்திருந்தேன். ஆனால் அது சரியென்று எனக்கு எப்படித் தெரியும்? அதை நான் மறுபடியும் காண வேண்டும். கர்த்தருடைய நாமத்தில் நான் சொப்பனத்துக்கு அர்த்தம் உரைத்து, அது அவ்விதமாக இருக்கவில்லை என்று எப்பொழுதாவது எந்த ஒரு இடத்திலுள்ள யாருமே தன் விரலைச் சுட்டிக் காட்டி என்னைக் குற்றப்படுத்த முடியாது. ஆம், ஐயா! நான் கர்த்தருடைய நாமத்தில் உரைத்தஏதொன்றும் அதேவிதமாக நிறைவேறாமல் போனதில்லை.

ஏனெனில் நான் – அது அவர். அப்பொழுது அது என் பொறுப்பல்ல, அது அவருடைய பொறுப்பாகி விடுகிறது. –

**176.** நான், “பார். ட்ரூடி, நாம் அரிசோனாவுக்குப்போகிறோம் என்று வைத்துக்கொள்வோம், நீ அங்கு அடைந்த பிறகு நான் உன்னிடம் வந்து, “கர்த்தர் உரைக்கிறதாவது; உன் தம்பி (சிறு ஜானி, அவனுடைய வயிறு எப்பொழுதும் திறந்திருக்கிறது என்று நான் கேலி செய்வது வழக்கம்)... நான் அவளிடம், “அவன் தெருவில் வாகனம் ஏறி

மரித்துப் போனான் என்று வைத்துக் கொள்வோம். நான் உன்னிடம் என்ன நடக்கப்போகிறதென்று உனக்குத் தெரியும், அவன் தெருவில் வாகனம் ஏறி மரித்துப் போவான்’ என்கிறேன். நீ என்னிடம் வந்து, “சகோ. பிரான்ஹாமே...’ என்பாய். அல்லது அவனை சகோ. பிரான்ஹாமிடம் கொண்டு செல்லுங்கள்’ என்பாய். அதன் பிறகு நீ என்னைத் தேடிக் கொண்டு வந்து, அப்பொழுது நான் வெள்ளை சூட் அணிந்து கொண்டிருக்கும் ஒரு மனிதனுடன் படிக்கட்டில் நின்று

பேசிக்கொண்டிருப்பேன். நான் ஜானியின் மேல் கை வைப்பேன். அவன் உயிர் பெற்று ஓடிப்போவான்“ என்று சொன்னேன். நான் அவளிடம், “அதே விதமாக நீ மேற்கு பிரதேசத்துக்கு செல்கிறாய், முதலாவதாக என்ன தெரியுமா, ஒரு நாள் உன் தாயார் கதறுவதையும், உன் தந்தை கதறுவதையும் நீ கேட்கிறாய். நீ பார்த்த போது, ஜானி வாகனம் ஏறி மரித்துப் போயிருப்பதைக் காண்கிறாய். நீ என்ன செய்வாய்?’ என்று கேட்டேன். பாருங்கள்? நீங்கள் என்னை நம்புகிறீர்கள். பாருங்கள்? உங்களுக்கு என் மேல்

நம்பிக்கை இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். நான் எதையும் ஊகித்து உங்களிடம் கூறப் போவதில்லை. உங்களிடம் நான் உண்மையைக் கூறுவேன், இல்லையென்றால் ஒன்றையும் கூற மாட்டேன். நான் அவளிடம், “அதன் பிறகு நீ என்னிடம் வந்து, ’ஓ, சிறு ஜானி’ – அல்லது நீ உன் தாயிடம் வந்து, ’ஓ, சிறு ஜானி வண்டி ஏறி கொல்லப்பட்டான். அவன் மரித்துப் போனான், அவன் மரித்துப் போனான்’ என்று கூறுகிறாய் என்று வைத்துக் கொள்வோம்.

177. டாக்டர் வருகிறார், அவனுடைய கண்களை திறந்து பார்க்கிறார், அவனுடைய இருதயத்தை, அவனுடைய மூச்சை பரிசோதிக்கிறார். அவர், “அவன் இறந்துவிட்டான், அவனை சவக் கிடங்குக்கு கொண்டு செல்லுங்கள்’ என்கிறார், அப்பொழுது நீ, “ஒரு நிமிடம் பொறுங்கள்! ஒரு நிமிடம் பொறுங்கள்! அவனை என் கரங்களில் ஏந்திக் கொள்கிறேன்; நாம் நடப்போம்” என்கிறாய். ஆமென்

“ட்ரூடி, நீ எங்கே போகிறாய்?“

"எனக்குத் தெரியாது"

"உன் கரங்களில் என்ன?" இறந்து போன உன் தம்பியை நீ கரங்களில் ஏந்திக் கொண்டிருக்கிறாய். நீ தெருவில் நடந்து சென்று கொண்டேயிருக்கிறாய். ஜனங்கள் "அந்தப் பெண்ணுக்கு பைத்தியம் பிடித்து விட்டதா?" என்று கேட்கின்றனர். இல்லை, ஐயா! அவள் கர்த்தர் உரைக்கிறதாவது என்பதைக் கொண்டிருக்கிறாள். என்ன நடக்கப் போகிறது?

178. முதலாவதாக என்ன தெரியுமா? நீ உன் தகப்பனிடமும்

தாயினிடமும், “பொறுங்கள், நாம் சகோ.பிரான்ஹாமைக் கண்டு பிடிப்போம். அவர் வெள்ளை சூட் அணிந்துள்ள ஒரு மனிதனுடன் படிக்கட்டுகளில் நின்று கொண்டு பேசிக் கொண்டிருப்பார். அதோ அவர் அங்கு நின்று கொண்டிருக்கிறார். என்ன நடக்கிறதென்று பாருங்கள்” என்பாய். உன் மனதில் எவ்வித சந்தேகமுமில்லை. நீ என்னிடம் நடந்து வந்து, “சகோ.பிரான்ஹாமே, நீங்கள் என்னிடம் என்ன கூறினீர்கள் என்று ஞாபகம் உள்ளதா?“ என்பாய்.

“ஆம், ட்ரூடி, ஜானி எழுந்திரு“ அவன் குதித்தெழுந்து தெருவில் ஓடிப் போவான்.

179. நான் என் மனதில் சரியென்று படும் சில காரியங்களை ஊகித்து உங்களிடம் கர்த்தர் உரைக்கிறதாவது என்று சொல்லி விட்டு, அது தவறாயிருந்து, அது நடக்காமல் போனால், அது நிறைவேறாமல் போனால், அந்த பையனைக் குறித்து நீ பயம் கொண்டிருப்பாய். அவனைக் கொண்டு வர வேண்டுமா வேண்டாமா என்று உனக்குத் தெரியாது.

**180. உங்களுக்கு உதவி செய்ய தேவன் என்னை இங்கு அனுப்பியிருக்கிறார். அது உங்களை வெட்டினாலும், நோகப் பண்ணினாலும், என்ன செய்தாலும், அதை நான் கூறியே ஆக வேண்டும்.**